**2026 மார்ச் மாதம் 06– ஆம் தேதி வெள்ளிக்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**O.S. நெம்பர் : 31/2019**

O.S. No.: 31/2019 – நாகேந்திரமணி DW3 06.03.2026
த/பெ.பிச்சைமணி

**சாட்சி அழைக்கப்பட்டு 18 முதல் 20 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. இந்த வழக்கின் 7ம் லக்கச் சொத்தானது நெடுஞ்சாலை விரிவாக்க பணிக்கு தேவைப்படுவதால் 19ம் பிரதிவாதியால் தேனி மாவட்டம், தேனி வட்டம், ஊஞ்சாம்பட்டி கிராமம், சர்வே எண்.437, 2797 ச.மீ ஒரு பகுதியாகவும், 3598 ச.மீ இன்னொரு பகுதியாக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரிதான். 2797 ச.மீ. பொறுத்து அதற்கான இழப்பீட்டு தொகை ரூ.1,14,289/– நிர்ணயம் செய்யப்பட்டு, அந்த தொகையை பெறுவதற்கான உரிய ஆவணங்களுடன் உரிமையாளர் சந்திரசேகர் உரிமை கோரியதால் தேனி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி காசோலை எண்.708052 மேற்படி தொகை ரூ.1,14,289/–, 22.03.2013ம் தேதி சந்திரசேகருக்கு வழங்கப்பட்டது என்றால் அவர் சொல்லி தெரிந்து கொண்டேன்.

2. மற்றொரு பகுதியான 3598 ச.மீ.–க்கான இழப்பீட்டு தொகை ரூ.4,39,869/ தொகை கணக்கீடு செய்யப்பட்டு நில உரிமையாளருக்கு வழங்கப்படுவதற்காக தயாராக உள்ளது என்றால் சரிதான். மேற்படி அரசு வைப்பீட்டில் பணம் உள்ளது என்றும், அதற்கு இடையிலேயே வழக்கு தாக்கல் செய்யப்பட்டதால் அந்த பணம் யாருக்கும் ஒதுகப்படாமல் அரசு வைப்பீட்டிலேயே இருந்து வருகிறது என்றால் சரிதான்.

**1 மற்றும் 16ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

3. நான் என்ன படித்துள்ளேன் என்றால் Diploma படித்துள்ளேன். நான் எந்த வருடம் படிப்பை முடித்தேன் என்றால் 1990–1991ம் ஆண்டு படிப்பை முடித்தேன். இவ்வழக்கின் வாதி எனது தாயார் ஆவார் என்றால் சரிதான். வாதி என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அவருக்கான

பாகத்தை கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். நான் உயர்நிலை பள்ளிப்படிப்பை எங்கு படித்தேன் என்றால் 1 முதல் 8 வரை பண்ணைக்காடு, 9, 10 வகுப்பை தேனி, அல்லிநகரம், 11, 12 வகுப்புகள் பண்ணைக்காடு பள்ளிகளில் படித்தேன்.

4. நான் பண்ணைக்காட்டில் படித்துக்கொண்டிருந்தப்போது நானும், எனது தாயாரும் பண்ணைக்காட்டில் வசித்து வந்தோம் என்றால் சரிதான், விடுமுறை தினங்களில் தேனிக்கு வந்துவிடுவோம். நான் பெருமாள்மலையில் மருந்தகம் வைத்து நடத்தி வந்தேன் என்றால் அந்த மருந்தகத்தில் மருந்து ஆளுநராக வேலை செய்தேன். மேற்படி மருந்தகத்தில் எத்தனை வருடங்களாக வேலை பார்த்தேன் என்றால் 1993 முதல் 2000 வருடம் வரை வேலை பார்த்தேன். நான் அந்த மருந்தகத்தில் வேலை பார்க்கவில்லை என்றாலும், நான் தான் அந்த மருந்தகத்தை வைத்து நடத்தி வந்தேன் என்றால் சரியல்ல.

5. 1992ம் வருடத்தில் நான், 1, 2 பிரதிவாதிகள், இறந்துபோன சந்திரசேகர் ஆகியோர் சேர்ந்து பாகப்பிரிவினை பத்திரம் எழுதி பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான், பெரியோர்கள் முன்னிலையில் எழுதிக்கொண்டோம், அதில் எனக்கு ரூ.60,000/- பணமும், இரண்டு வீடுகளும் பாகமாக எழுதிக்கொடுத்தார்கள், ஆனால் பதிவு செய்யும்போது எனக்கு எழுதப்பட்ட பாகத்தை அடித்து பதிவு செய்துக்கொண்டார்கள். 10.02.1992ம் தேதிய வா.சா.ஆ.2 ஆவணம் எழுதியபோது எனக்கு வயது என்ன என்றால் 19 வயதாகும். அந்த ஆவணத்தில் எத்தனை இலக்க சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை எழுதப்பட்டது என்றால் 7 சொத்துக்கள் ஆகும்.

6. வழக்குரையில் எத்தனை சொத்துக்கள் குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 10 சொத்துக்கள் ஆகும். வா.சா.ஆ.2 ஆவணத்தில் வழக்கு 7 முதல் 10 லக்க தாவா சொத்துக்கள் இடம்பெறவில்லை என்றால் சரிதான்.

வழக்கு 7 முதல் 10 லக்க தாவா சொத்துக்களை வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை பத்திரத்தில் ஏன் சேர்க்கப்படவில்லை என்றால் பொதுவாக வைத்திருந்தார்கள், மேலும் 9, 10 லக்க சொத்துக்கள் என் பெயரில் எழுதப்பட்டது, ஆனால் பதிவு செய்யவில்லை. தாவா 7 முதல் 10 லக்க சொத்துக்கள் எனது பாட்டி வீரம்மாள், சின்னம்மாள் ஆகியோர்களுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்பதால் பாகப்பிரிவினைக்கு உட்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல, பொதுக்குடும்ப சொத்தாகும்.

7. தாவா 7, 8 லக்க சொத்துக்கள் ஒரே சொத்துக்கள் என்றாலும், தவறாக தனித்தனியாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் தனித்தனி பெயரில் வீரம்மாள் மற்றும் சின்னம்மாள் பெயர்களில் இரண்டு ஏக்கர் சொத்துக்கள் உள்ளன. தாவா 7,8 லக்க சொத்துக்கள் 06.03.1958ம் தேதியில் வீரம்மாள், சின்னம்மாள் ஆகியோர் தனித்து எர்ரக்கம்மாளிடமிருந்து கிரையம் பெற்றார்கள் என்றால் சரியல்ல, அவர்களுக்கு தனிப்பட்ட வருமானம் இல்லை, எனது தாத்தா அவர்களது பெயர்களில் வாங்கினார். 1958ம் ஆண்டு அவர்கள் எந்த அடிப்படையில் மேற்படி தாவா 7, 8 லக்க சொத்துக்களை வாங்கினார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

8. 1958ம் ஆண்டு வீரம்மாள், சின்னம்மாள் ஆகியோர்களால் அவர்களது நகைகளை வைத்து வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றாலும், அவர்களுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. தாவா 9, 10 லக்க சொத்துக்கள் ஒரே சொத்துக்கள் என்றாலும், நாங்கள் தனித்தனியாக காண்பித்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா 9, 10 லக்க சொத்துக்கள் கிராம நத்தம் என்றாலும், நாளதுதேதிவரை எனது பாட்டி வீரம்மாள் பெயரில் தான் வருவாய்துறை ஆவணங்கள் இருந்து வருகின்றன என்றால் சரிதான்.

9. வா.சா.ஆ.2, 1992ம் ஆண்டு பாகப்பிரிவினை எழுதும்போது எனது பாட்டிகள் வீரம்மாள், சின்னம்மாள் ஆகியோர்கள் உயிருடன் இருந்தார்கள் என்றால் சரிதான். தாவா 7 முதல் 10 லக்க சொத்துக்கள் எனது பாட்டிகளின் தனிப்பட்ட சொத்துக்கள் என்பதால் பாகப்பிரிவினைக்கு உட்பட்டது அல்ல என்பதால் சேர்க்கப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணப்படி 1992ம் ஆண்டு எனது பாகமாக ரூ.60,000/- கொடுத்தார்கள் என்றால் சரியல்ல, அவ்வாறு எழுதப்பட்டுள்ளது, ஆனால் கொடுக்கவில்லை. வா.சா.ஆ.2 ஆவணம் முறையாக இருந்ததால் தான் நான் அந்த ஆவணத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் அந்த காலக்கட்டத்தில் நான் மதுரையில் பயிற்சியில் இருந்தேன், பெரியோர்கள் கையொப்பம் போடச் சொன்னார்கள், கையொப்பம் போட்டேன், அந்த காலக்கட்டத்தில் எனக்கு அவ்வளவாக விபரம் இல்லை.

10. வா.சா.ஆ.2 ஆவணத்தை ஆட்சேபனை செய்து நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் நேரடியாக கேட்டுள்ளேன், வழக்கு தாக்கல் செய்யவில்லை, பாட்டிகளின் வாரிசுகள் மற்றும் எனது அம்மாவை மேற்படி பத்திரத்தில் சேர்க்காததால் செல்லாது என்று சாக்குப்போக்கு சொல்லி தட்டிக்கழித்தார்கள். எனது பாட்டிகள், எனது அம்மா ஆகியோர்களுக்கு தெரிந்துதான் வா.சா.ஆ.2 ஆவணம் எழுதப்பட்டது என்றாலும், அதனால் எனது பாட்டிகள் உயிருடன் இருந்தபோதே ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது பாட்டிகள் உயிருடன் இருந்த காலத்தில் வா.சா.ஆ.2 குறித்து வழக்கறிஞர் அறிவிப்போ, வழக்கோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

11. நான் வா.சா.ஆ.2ன்படி எனக்கு பாகத்தின்மூலம் கிடைத்த ரூ.60,000/- தொகையை கொண்டு தான் பெருமாள்மலையில் மருந்தகம் தொடங்கி 10 ஆண்டுகளாக நடத்தி வந்தேன் என்றால் சரியல்ல. பாகம் கொடுக்கவில்லை என்று உண்மையை மறைத்த வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்றால் 2002ம் வருடம் ஆகும். எனது

திருமணம் எங்கு வைத்து நடைபெற்றது என்றால் வத்தலக்குண்டு, திருமண மண்டபம் ஆகும். எனது திருமணத்தை எனது தாத்தா ஜெகநாதன் நடத்தி வைத்தார் என்றால் சரியல்ல, அவர் உயிருடன் இல்லை, எனது சித்தப்பா நடத்தி வைத்தார்.

12. எனது திருமணத்தை எனது சித்தப்பா நடத்தி வைக்கவில்லை என்றாலும், எனது தாயாரும், எனது தாத்தாவும் நடத்தி வைத்தார்கள் என்றால் சரியல்ல. 1992ம் வருடத்திற்கு பின்னர் கூட்டுக்குடும்பமாக வாழவில்லை என்றாலும், தனிக்குடும்பமாக தான் வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்திருந்தால் எனது திருமணத்தை தேனியில் நடத்தி வைத்திருப்பார்கள் என்றால் சரியல்ல. 1992ம் வருட பாகப்பிரிவினைக்கு பின்னர் அவரவர்களுக்கு கிடைத்த பாகத்திற்கு அவரவர்கள் பெயரில் பட்டா வாங்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான்.

13. எனது அம்மா கொடைக்கானல், அடுக்கம் பகுதியில் அரசு அங்கன்வாடியில் சமையல் உதவியாளராக வேலை செய்து வந்தார் என்றால் சரிதான். எனது அம்மா எப்போது ஓய்வு பெற்றார் என்றால் 2012ம் வருடம் ஆகும். 1992ம் வருடத்தில் எழுதப்பட்ட ஆவணத்தின்படி எனது பாகமான ரூ.60,000/- கொடுக்கவில்லை என்று எனது தாயாரிடம் சொல்லிவிட்டேன் என்றால் இல்லை. 1992ம் வருடம் முதல் 2002ம் வரை பெருமாள்மலையில் நான் மருந்தகத்தில் வேலை பார்த்ததாக சொல்லப்படும் காலக்கட்டத்தில் பண்ணைக்காட்டில் நானும், எனது அம்மாவுடம் ஒரே வீட்டில் வசித்து வந்தோம் என்றால் சரிதான், விடுமுறை நாட்களுக்கு தேனிக்கு வருவோம்.

14. 1992ம் பாகப்பிரிவினைக்கு பின்னர் நாங்கள் தேனிக்கு வரவில்லை என்றாலும், பண்ணைக்காட்டில் தான் வசித்து வந்தோம் என்றாலும், அவ்வாறு தேனிக்கு வந்ததாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அம்மாவிற்கு 1992ம் வருடத்திலேயே பாகப்பிரிவினை

விபரம் தெரியும் என்றாலும், 1, 2 பிரதிவாதிகளிடமிருந்து சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் எனது அம்மாவிற்கு ஆதரவாக கூட்டுச்சதி செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

15. சின்னம்மாள் 01.12.2012 ம் தேதி 7 வது லக்க சொத்தில் தனக்குள்ள பாதி பாகத்தை 1, 2 பிரதிவாதிகளுக்கு தானசெட்டில்மென்ட் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட பத்திரமாகும். மேற்படி ஆவணத்தை ஆட்சேபிக்க எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 7 வது லக்க சொத்தில் வீரம்மாள் மீதமுள்ள பாதி பாகத்தை 25.08.2003 ம் வருடத்தில் இறந்த சந்திரசேகருக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த உயில்படி சந்திரசேகர் வீரம்மாளை பராமரிப்பு செய்யாத காரணத்தினால் அந்த உயிலை ரத்து செய்துவிட்டு, 30.08.2003 ம் தேதியில் எனக்கும், 1, 2 பிரதிவாதிகள், இறந்த சந்திரசேகருக்கும் உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான்.

16. தாவா 9, 10 லக்க சொத்துக்களில் எனக்கு 1/4 பாகமும், வீரம்மாள் எழுதிவைத்த உயிலின்படி வீரம்மாளுக்குரிய தாவா 7, 8 லக்க சொத்துக்களில் அவரது 1/2 பாகத்தில் எனக்கு 1/4 பாகமும் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. தாவா 7 முதல் 10 லக்க சொத்துக்களில் உயில்படி எனக்கு பாகம் கிடைக்கத்தக்கது என்று கேட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் இவ்வழக்கில் சேர்த்துள்ளோம். தாவா 9, 10 லக்க சொத்துக்களை வீரம்மாளின் உயிலின்படி கூட்டுப்பாத்தியத்தில் இருந்து வருகிறேன் என்றாலும், திருமுலு செட்டியாரின் கூட்டுக்குடும்ப சொத்து என்ற அடிப்படையில் அனுபவித்து வரவில்லை என்றால் சரியல்ல.

17. தாவா 9, 10 லக்க சொத்துக்கள் திருமுலு செட்டியாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்கு திருமுலு செட்டியார் பெயரில் தான்

வருவாய் ஆவணங்கள் இருந்து வருகின்றன என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை, 9ம் லக்க சொத்தில் வா.சா.ஆ–2 ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளது. தாவா 9வது லக்கச் சொத்திற்கு திருமுலு செட்டியாருக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

18. பாகம் பிரித்த விபரம் எனக்கும், எனது தாயாருக்கும் நன்றாக தெரிந்திருந்தும் 30 வருடங்கள் கழித்து நடந்ததை மறைத்து வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வருவாய் துறை ஆவணங்கள் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்டதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். பாகப்பிரிவினையை நானும், எனது தாயாரும் ஒத்துக்கொண்டதால் தான் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் வருவாய்துறை ஆவணங்கள் ஏற்பட்டதற்கோ, தனித்தனியாக சொத்துக்களை அனுபவித்து வருவதற்கோ நானும், வாதியும் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது தாயாரால் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும், எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**2, 17, 7 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** – ஒத்திவைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 06.03.2026 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.06 18:15:55 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
06.03.2026.